
கலைந்துபோன வண்ணக் கனவு
Pax Ravichandra
+94763223960
pax.ravichandra@gmail.com
24.07-2024

கலைந்துபோன வண்ணக் கனவு



வண்ணம்தான் பொன்னைச் சொல்ல,
கன்னங்கள்தான் கிண்ணம் பழுத்தைச் சொல்ல
எண்ணம்தான் கவிதை சொல்ல-இதயப்
பண்ணும்தான் காதல் சொல்லியதே



கண்டதும் கண்களில் வண்ணக் கனவுகள் பூத்தாட
தேன் உண்ட சுவையை மனம் சொல்லிக் கூத்தாட, காதல்,
காதல் என இதயம் இசைபாட, இதயத்தில் கவியரங்கம்,
கன்னியோ அழகு பூத்தாடும் பொற்சுரங்கம்

பக்கத்து வீட்டிற்கு குடி வந்த கல்லூரிப் பாவை
எப்பக்கம் பார்த்தாலும் திகட்டாத அழகுச் சோலை
காணும்போதெல்லாம் கண்களில் நாணம்
காணாதபோது மனதிலே என்னை இழந்த சோகம்

நாட்கள் செல்லத் தாயோடு வளர்ந்த உறவு
வீட்டிற்கு உரிமையோடு செல்ல பூத்த காதல் உறவு
அநாதை நான் அறிந்த அன்னையின் மனதில் பாசம்
மகளின் மனதிலோ வற்றாத நேசம்





தந்தையோ அரச உயர் அதிகாரி,
அநாதை என் காதலுக்கு தடை விதித்த நீதிபதி
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை-அப்பாவின்
மனதை முறிக்க அன்பு மகளுக்கு மனமில்லை

உன்னால் என்னுள் மலர்ந்த பூவனம்
எனக்கு நீயில்லை என்றபோது அதுவே கொதிக்கும்
பாலைநிலம், என் பூவனம் காய்ந்திட
என் சுவாசத்தில் நிலைத்த உன் பூ மணம்

அநாதை எனக்குத் தன் அருமை மகளை கொடுக்க
அன்புத் தந்தைக்கு மனமில்லை, மனம் விரும்பியும்
தந்தை சொல்லைத் தட்ட-செல்ல மகளுக்கு துணிவில்லை
இதயத்திலே ஏழ்கடலாய்ச் சோகம் அலைமோதும் நிலை

நான் அறியாமலே அவளுக்கு நடந்த நிச்சய தாம்பூலம்
என்னைப் விட்டுப் பிரிந்த என் பூபாளம்-கண்ணீரோடு
ஊரைவிட்டு என் பயணம்-கன்னியோ இரயில் நிலையத்தில்
என்னைத் தேடி வந்து விடை கொடுத்த அவலம்

பிரியா விடை சொன்ன அவளுக்கு இரயில் நிலையத்தில்
என்னைப் பிரிய மனமில்லை-வானம் குமுறி அழுதிட
மழை நீர் மங்கை கண்ணீரை மறைத்திட
காதலர் பிரிந்த நிலை, என் காதலோ பிரியாத நிலை



மாதங்கள் பதினெட்டு உருண்டோட, என் உறவுகள்
எனக்காய்ப் பார்த்த கன்னியும் அழகி
விடுதியில் தங்கிப் படிக்கும் கல்லூரி மாணவி
கண்டதும் காதலாகிப் பூத்த வருங்காலத் துணைவி

சுரிகுழலில் மல்லிகை சிரிக்க-சுந்தர
மதிமுகத்தின் புன்னகை வருக என வரவேற்க
நாணம் சொல்லிய நறுமண மேனி
கானம் பாடும் சோடிக் குயிலாய் தேவி



கதிர் கண்டு மலர்ந்த பூவாய் பூவை-என்
கடந்தகால கதைகேட்டு என்னைத் தேற்றிய கோதை
மொழிகளில் தேனின் இனிமை- கருகிய என்
மனதில் புது வசந்தம் பூத்த புதுமை



பாடி அழைக்கும் பெண்மை காணும்போதெல்லாம்
ஆடிக்களிக்கும் தோகைமயிலாய் மென்மை-கண்டு
களித்த நெஞ்சில் காதலின் புது உதயம், புண்ணான
காதல் நெஞ்சுக்கு அருமருந்தான கன்னியின் இதயம்

வண்ணம் கொண்ட மலராய் அழகு
எண்ணும்போதெல்லாம் வசந்தமாய் என்தன் உலகு
பனி விழும் மலர்வனமாய் பாவை மனது
கனிமொழியாள் இதயமோ காதலின் பொன்னரங்கு

தட்டு மாற்றி உறுதி செய்த திருமணம் ஊருக்குச் சொல்ல
உறவோடு வந்த என் பயணம்- வைத்தியசாலையில்
உயிருக்கு அல்லாடும் நிலையில் என் முன்னாள் காதலி
அவள் தந்தை சொன்ன சேதியோ பேரிடி

இரு சிறுநீரகங்களும் பழுதடைய, சிகிச்சைக்காய்
பல மாதம் வைத்தியசாலையில் கழியும் வாழ்வு
உயிர் வாழ்வதே அதிசயம் வைத்தியர் மொழிய,
ஊனுறக்கம் துறந்து அவளோடு கழியும் என் பொழுது

ஊசலாடும் உயிர், நேசத்தால்
முளைக்கத் துடிக்கும் காதல் பயிர்

கண்ட விழிகளில் ஆனந்த நடனம், கல்யாணம்
நடக்கவில்லை, என் வாழ்நாளுக்கு காலன் தேதி
குறித்த நிலை, கசங்கிய மலராய்த் தோற்றம்
என்னைக் காண மலர்ந்த முகத்தில் சந்தோஷம்





நாளும் உறவாடி, தெம்பூட்டி, மனதில் மறவாத காதலுக்கு
நீர் ஊற்றி , மங்கையை மீட்க என் முயற்சி, தந்தைக்கோ
மிக்க மகிழ்ச்சி, ஒரு நாள் உரைத்தார் உன் ஊருக்கு நீ
போகவேண்டும், உன் திருமணம் நடக்கவேண்டும்

மறுத்தால் உண்மையை என் மகளிடம் கூறுவேன்
அன்பால் என்னை மிரட்டிப் பணியவைத்த மனிதர்
என் மகள் பிழைப்பாள் என்ற நம்பிக்கை எனக்கில்லை
ஏமாற்றம் பெருந்தொல்லை, அவளை மறந்துவிடு

ஊர் வந்து என் உறவோடு திருமணம் செய்ய
கூறைச்சேலை வாங்க சென்ற நாங்கள்,
அதிசயமாய் வந்த அழைப்பு, உன் காதலி பிழைக்க
வாய்ப்புண்டு, வைத்தியர் சொன்ன நற்செய்தி

நெஞ்சிலே பூ மழை, நினைவிலே தேன் மழை
கடவுளோ கண் திறந்த அருள் நிலை-கொட்டு மேளம் கொட்ட,
கோதையைச் சூடும் நாள் நெருங்க, பொட்டு வைத்த
வட்ட நிலவின் நெற்றியில் சிரிக்கும் செங்குங்குமம் என் கண்களில்

கணப்பொழுது தோன்றி மறைந்த வண்ணக் கனவு
விழா காணும் பொழுதாய் என் மனது
எட்டாத வானில் உலா வந்த தேன் நிலவு-இனி
கிட்டுமே என மனம் கண்ட இனபக் கனவு





உன் அன்பால் அவளுடலில் அற்புத முன்னேற்றம்,
சிறுநீரக மாற்று சிகிச்சையளித்தாள்-பிழைப்பது நிச்சயம்,
ஆனந்தம் தாங்காது சேதியை என்னவளிடம் கூற,
அணைத்து விடை தந்து, சேர்ந்து வாழ வாழ்த்திய நங்கை

ஆவலாய் நான் புறப்பட, கன்னி அவள் நெஞ்சிலே
காதலை இழந்த அவலம், கண்களோ ஈரவிழிக்காவியம்
எடுத்த கூறையை திருப்பிக் கொடுத்து, ஏமாற்றத்தை
நெஞ்சில் மறைத்து என்னை வாழ்த்திய தேவதை

பரிட்சையெல்லம் சித்தி, காதற்
பரிட்சையோ தொடக்கத்திலே தோல்வி



காதலைப் போற்றும் கன்னி எனக்கு நிச்சயித்த உத்தமி
கண்ணீரோடு கட்டியணைத்து நன்றி சொல்லி-காதலியைக் காண
என் ஆனந்தப் பயணம், வாத்தியக்காரர்கள் வைத்தியசாலையில்
வாசிக்க என் காதலைச் சொல்ல மனதிலே ஆனந்தம்

இரவு மலர்ந்த வேளையில் நாங்கள் வைத்திய சாலை
முன்றலில் நின்றோம், மழை தூவ, பூ மழை பொழிய
என்னவள் காட்சி தருவாள் என் மனம் துள்ள,
தள்ளுவண்டியில் அவள் பிணம், நானோ நடைப்பிணம்

கங்கையை கண்ணில் வைத்து, காங்கையை
அடிவயிற்றில் வைத்து, காதலை என்
நெஞ்சில் வைத்தவள் கண்ணுறங்கிட-உறங்காத
என் இதயம் ஓவென்று அழுதது





உள்ளம் குமுறி கண்ணாடியாய் உடைந்து நொருங்க
கள்ளம் கபடில்லாத பேதை, என்னைச் சூடிட
கனவு கண்ட கோதை, கண்ணனின் என் ராதை
கண்மூடித் தூங்க தவித்த நானோ பேதை

கண்ட முதல் நாளில் நெஞ்சை குளிரவைத்து
நினைவை காதலால் சிலிர்க்க வைத்த அழகி,
நோயால் வாடிய பூவான அன்புக் கிள்ளை
என்னாள் மறுபடியும் பூத்தாடிய காதல் முல்லை

அவள் மரண யாத்திரையில் கலையாத மௌனம்
என் இதயத்திலே மாறாத இமயத்தின் கனம்
எரியும் தீயில் அவள் உடலின் சங்கமம்
எரிக்கும் நெருப்பில் தவிக்கும் என் வசந்தம்

கானக் குயில்களாய்ப் பாடி, வானம்
பாடிகளாய் பறந்து-வண்ண அஞ்சுககங்களாய்
கொஞ்சிக் கதைபேசிய காலம் கொஞ்சமே,
இனி வாழும் காலமெல்லாம் மாறாத சோகமே



தந்தை சொன்ன என் திருமணச்சேதி மங்கையவளுக்கு
மரணச் சேதியானது, வாழத் துடித்தவள் வாடிப்போனாள்
என்னைக் காண மனமின்றி , பிரியா விடை சொல்ல மனமின்றி
பிரியமானவள் பிரியத்தோடு தூங்கிப்போனாள்?

பூ மழை பொழிந்த வானிலே தீ மழை
பூபாளம் பாடிய மனதிலே வெடித்த எரிமலை

என் விழிகளிலோ அருவி, மொழிகளிலோ முகாரி
அவள் மூடிய விழிகளுக்குள் அமைதி, எல்லாம்
முடிந்ததென்ற நிம்மதி? கண் மறைந்த புன்சிரிப்பு
காலமெல்லாம் நிலைக்க என் மனதிலே சோகக் கசப்பு



மந்திரமாய் உன் பெயரை உச்சரித்தேன், காதல்
மகாராணியே என் நெஞ்சம் நொருங்கிப்போனது
காதல் தேவதையாய் உன்னைப் பூஜித்தேன்
காதல் நிலவே கண்மறைந்த கதையானது



கல்லில் எழுத்தாய் காதலை-என் நெஞ்சில் எழுதிவிட்டு
ஏனடி கண் மறைந்தாய்? மீண்டும், கண்டு துளிர்த்த காதலை
கடவுளே ஏன் பறித்தாய்? காமன் மலர்க்கணையும் நஞ்சானது
காலன் பாசக்கயிறும் காதலுக்கு தூக்குக் கயிறானது?

காதலுக்கு கடவுளே நீ வழங்கியது நீதியா?
காதல், காதல் காதல், காதல்
இன்றேல் சாதல்-என்னவளுக்குப்
பரிசானது, எனக்கோ சாபமானதே?



தந்தை சொல்லை மதித்த கிள்ளை தனியாய் பாடையில் போனது-
தந்தி அறுந்த வீணை தனியே தெருப்புழுதியில் வாடிக் கிடந்தது
கண்டு பிறந்த காதல் கன்னியோடு மறைந்தது
பண்ணோடு பிறந்த மோகனம், முகாரியாய் மாறியது



மறந்து வாழ நினைத்தவன் நெஞ்சில்
மறுபடியும் மடியாத காதலை உயிர்ப்பித்தாய்
நினைந்து, நினைந்து நெஞ்சம் குமுறியழ
காதல் நிலவே மரண இருளில் முகம் மறைத்தாய்?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-24-07-2024